1970 மார்ச் 20]

Cuddalore Port

* 464 Q.—Thiru K. SAHADEVA KANDER : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether the construction of Southern break-water at Cuddalore Port Beach has been taken up for execution ; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : (அ) ஆம்.

(இ) கடலூர் துறைமுகத்தின் தென்பகுதியில் அலைத்தடுப்புச் சுவர் அமைக்கும் பணி நடந்து வருகிறது. துறைமுக வளர்ச்சித் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள 1,15,24,000 ரூபாயில் குறிப்பிட்ட இப்பணிக்காக 9,50,000 ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அலைத் தடுப்புச் சுவரின் மொத்த நீளம் 500 அடி ஆகும். அந்த 500 அடியில் 159 அடி நீளம் சிமிட்டி கான்க்ரீட்டில் 4,10,000 ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள 341 அடி நீளத்துக்குக் கூழாங்கல் பதித்த அலைத் தடுப்புச் சுவர் கட்டப்படும். சிமின்ட் கான்க்ரீட்டினல் தோணித்துறை கட்டும் பணி முன்னேறி வருகிறது. இத்திட்டத்தை 1971-ம் ஆண்டு மார்ச் திங்களுக்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

திரு. கே. சகாதேவக் கண்டர் : தலைவர் அவர்களே, இந்த வேலையை பூர்த்தி செய்ய எவ்வளவு காலம் ஆகும்?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தலைவர் அவர்களே, 1971 மார்ச் மாதத்திற்குள்ளாக கட்டி முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

திரு. அ. லெ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட தடுப்புச் சுவர்கள் துறைமுகப் பகுதிகளில் மட்டும் கட்டப்படுகிறதா? அல்லது ஊர் அழிந்துவிடக்கூடிய நிலைமையுள்ள இடங்களில் ஊர்களைப் பாதுகாக்க தடுப்புச் சுவர் கட்டப்படுமா? திருச்செந்தூர் பகுதியில் உள்ள கோயிலை கடல் அலை அரித்து வருகிறது. அப்படிப்பட்ட இடங்களில் தடுப்புச் சுவர் கட்டப்படுமா? அந்தப் பகுதியிலிருந்து தடுப்புச் சுவர் கட்டவேண்டுமென்று அரசுக்கு கோரிக்கை ஏதேனும் வந்திருக்கிறதா? அப்படி வந்திருந்தால் அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தலைவர் அவர்களே, நான் சொன்ன விடை துறைமுக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் தடுப்புச் சுவர் கட்டுவதைப் பற்றி. துறைமுக வளர்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் தடுப்புச் சுவர் கட்டப்படுகிறது. கடல் அரிப்பு பற்றிய விளுக்களை பொதுப்பணித் துறை அமைச்சருக்கு எழுதியனுப்பினல் அவர் பரிசிலனை செய்வார்.

Rice Bran Oil Mill in Thanjavur district

*465 Q.—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Co-operation be pleased to state the details of the Rice Bran Oil Mill proposed to be set up in Thanjavur district?